அஞ்சல் வழி பாடங்கள் :

# சமாதான செய்தி

# The Message of Reconciliation

**இரண்டாம் பாகம்**

Mor Book - 2

Tamil Translation

கிறிஸ்து மாம்சத்தில் பூமியில்
இருந்த காலம்

பாடங்கள் 11 - 20

குறிப்பு எண் :

**S.M.விறை குமார்**

# கிறிஸ்து – தன்னுடைய ஊழியத்திற்காக ஆயத்தப்படுவது.

பாடம் – 11

தேவனுடனே கூட மனிதனுக்கு இருக்கின்ற பரிபூர்ண பந்தத்தை இழந்துப் போவதற்கு காரணமான ஆதாமுடைய பாவம் அதன்பின்பு மனிதன் தேவனோட மறுபடியும் சமாதானப்படுவதற்கு வேண்டியவனாயிருக்கின்றான். மனிதனுடைய பாவம் கழுவப்பட வேண்டும் மற்றும் குற்றம் நீக்கப்பட வேண்டும். அதினாலே ஏற்றக்காலங்களில் பரிசுத்த ஆவியின் மூலம் தேவனுடைய குமாரன் சரீரத்தைப் பெற்று மனுபுத்திரர் மத்தியில் வாழ்ந்தார். மனிதனின் இச்சையான சம்பந்தம் இல்லாமல் கர்ப்பம் தரித்ததுப்போல பரிசுத்த ஆவியானவர் ஒரு அற்புதத்தை உண்டுப்பண்ணினார். தேவனுடைய அபிஷேகர் என்றால் மனுப்புத்திரரை அவர்கள் பாவத்திலிருந்து இரட்சிப்பதற்கு பூலோகத்திற்கு மேசியாவை எவ்விதம் அனுப்ப வேண்டுமோ கேப்ரியல் தூதர் மூலம் மரியாவுக்கும், மற்றொரு தூதர் மூலம் யோசேபுக்கும் தெரியப்படுத்தப்பட்டன.

இதைப்பற்றி ஜனங்கள் தம்மை எவ்விதம் பார்ப்பார்களோ! மற்றும் இது நடக்கப்போகையில் பிறர் என்ன சொல்வார்களோ என்று பொருட்படுத்தாமல் இவ்விரண்டுப்பேரும் தேவனுடைய ஊழியக்காரர்களாக இருப்பதற்கு சம்மதித்தார்கள். அவர்கள் தேவனுக்கு கீழ்ப்படிந்தவர்கள் அதினால் தேவன் மூலம் செயல்படுத்தப்பட்டார்கள்.

அதற்கு அவர் நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்? என் பிதாவுக்குத்தவைகளில் நான் இருக்க வேண்டியதென்று அறியீர்களா என்றார். தங்களுக்கு அவர் சொன்ன வார்த்தையை அவர்கள் உணர்ந்து கொள்ளவில்லை (லூக்கா 2:49-50)

முப்பதாவது வயது வந்தபோது ஜனங்களெல்லாரும் ஞானஸ்நானம் பெற்றபோது இயேசுவும் ஞானஸ்நானம் பெற்று, ஜெபம் பண்ணுகையில், வானம் திறக்கப்பட்டது; பரிசுத்த ஆவியானவர் ரூபங்கொண்டு புறாவைப்போல அவர்மேல் இறங்கினார். வானத்திலிருந்து ஒரு சத்தமும் உண்டாகி, நீர் என்னுடைய நேசகுமாரன், உம்மில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது. (லூக்கா 3 : 21,22))

இயேசு ஞானஸ்நானம் பெற்றபின்பு, பரிசுத்த ஆவியினாலே நிறைந்தவராய், யோர்தானை விட்டுத் திரும்பி, ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டுபோகப்பட்டு, நாற்பதுநாள், பிசாசினால் சோதிக்கப்பட்டார். அந்த நாட்களில் அவர் ஒன்றும் புசியாதிருந்தார். அந்த நாட்கள் முடிந்தபின்பு அவருக்குப் பசியுண்டாயிற்று. (லூக்காக 4 : 1,2)

அவர் பிசாசினால் சோதிக்கப்பட்ட பின்பு நசரேத்திலுள்ள தன்னுடைய வீட்டிற்குச் சென்றார். அவர்கள் ஜெப ஆலயத்தில் வேதத்தை வாசித்துக் கொண்டு இருக்கின்றபொழுது (ஏசாயா 61 : 1-2)-ல், மேசியா வருவார் என்று தேவனுடைய வாக்குதத்தம் நிறைவேறுவதற்கு வந்தவன் நான்தான் என்று அவர்களுக்கு சுட்டிக்காட்டினார். சில காலம் சென்ற பின் தன் சுவிசேஷ வார்த்தைகளையும், தன்னுடைய உயிர்த்தெழுதலையும் பிறகு உபதேசம் பண்ணப்போகிற அவர்களை தேர்ந்தெடுக்கத் தொடங்கினார்.

காலம் நிறைவேறினபிறகு, தேவனுடைய குமாரன் பூலோகத்தில் வந்து, மனுஷர் மத்தியில் வாழ்ந்து தம்மை அறிந்த எல்லோருக்கும் மேசியாவாகவும் உறுதிப்படுத்தி காண்பித்தார். மற்றும் மனிதர்களுடைய பாவங்களுக்காக தன்னைத்தான் சம்பூர்ண பலியாக ஒப்புக் கொடுத்தார். தன்னுடைய சம்பூர்ணமான பூலோக வாழ்க்கையில், ஒரு பெரிய ஜனங்கள் மத்தியில் வெளிப்படையாக அவர் செய்த அற்புதங்கள் மற்றும் யோவான்ஸ்நானன் சொன்னபடி தீர்க்கதரிசனம் நிறைவேறும்படியாக இவைகள் நடந்துக்கொண்டு அநேக மகிகள் இந்த அற்புதங்களால் நன்மையடைந்தார்கள் எதிர்த்து நின்றவர்கள், பொறாமைக் கொண்டவர்கள் மற்றும் குற்றகுணம் கொண்டவர்கள் கூட இவைகள் நடந்தன என்று உறுதியாக ஒத்துக் கொள்ளவேண்டியதாய் இருந்தது. மாயக்காரரான மதபோதகர்கள் அவர்களுடைய அதிகாரம் மற்றும் அவர்களுடைய மேன்மைக்காக அவரை மறுதளித்தார்கள். அப்படி செய்வதற்கு அவர்கள் ஜனங்களிலே அவர்களுக்கு மேன்மையான சொந்த நியமங்களை மற்றும் வழிபாடுகள் கூட செய்யாதிருந்தார்கள்.

அவருடைய சீஷர்கள் அவருடைய உபதேசத்தைக் கேட்டார்கள். அவருடைய உவமைகள், அவருடைய அற்புதங்கள் ஆகியவற்றுக்கு சாட்சிகளாயிருந்தார்கள் மதநாயகர்கள். அவருக்கு எதிர்த்து நின்ற விஷயங்கள். என்னவெனில் மரணத்திலிருந்து உயிர்த்தெழுப்பப்பட்டவர்களைப் பற்றியும் மற்றும் குருடர்கள் பார்வையடைந்ததைப் பற்றியும், காது கேளாதவர்கள் குணமடைவதும் இவற்றையெல்லாவற்றையும் குறித்து சீஷர்கள் சாட்சிகளாய் இருந்தார்கள். இன்னும் அறிந்துக் கொள்வதற்கு அநேக காரியங்கள் இருக்கின்றன. இயேசு இப்படிச் சொன்னார். இன்னும் அநேகங்காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லவேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள். சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்கள்கள் நடத்துவார். அவர் தம்முடைய சுயமாய்ப்பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ் சொல்லி வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார். (யோவான் 16:12-14)

தான் ஜெபம் செய்ததுப்போல தன்னுடைய சம்பூர்ண பலிக்காக அவர் ஆயத்தமாயிருந்தார். இயேசு இவைகளைச் சொன்ன பின்பு தம்முடைய கண்களை வானத்துக்கு ஏறெடுத்து, பிதாவே, வேளை வந்தது நீர் உம்முடைய குமாரனுக்குத் தந்தருளின யாவருக்கும் அவர் நித்திய ஜீவனைக் கொடுக்கும்பொருட்டு... நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்து முடித்தேன். பூமியின்மேல் உம்மை மகிமைப்படுத்தினேன். நீர் உலகத்தில் தெரிந்தெடுத்து எனக்கு தந்து மனுவிருக்கு உம்முடைய நாமத்தை வெளிப்படுத்தினேன். நீர் எனக்கு கொடுத்த வார்த்தைகளை நான் அவர்களுக்குக் கொடுத்தேன். அவர்கள் அவைகளை ஏற்றுக்கொண்டு நான் உம்மிடத்திலிருந்து புறப்பட்டுவந்தேன் என்று நிச்சயமாய் அறிந்து, நீர் என்னை அனுப்பினீர் என்று விசுவாசித்திருக்கிறார்கள். (வசனம் 6-8)

உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும் உம்முடைய வசனமே சத்தியம். நீர் என்னை உலகத்தில் அனுப்பினதுபோல, நானும் அவர்கள் உலகத்தில் அனுப்புகிறேன். அவர்களும் சத்தியத்தினாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்களாகும்படி, அவர்களுக்காக நான் என்னைத்தானே பரிசுத்தமாக்குகிறேன். (வசனம் 14-19) யோவான் எழுதின சுவிசேஷத்தில்.

சமாதானம் எனப்படுவது, விடுதலை மற்றும் பாவமன்னிப்பைப் பற்றிய தேவனுடைய செய்தியைக் கொடுப்பது அவருடைய வேலை கிட்டதட்ட முடிவுக்கு வந்தது. ஆதலால் ஏற்ற வேலையிலே இயேசு சம்பூர்ண பலியாக மனுபுத்திரர் பாவங்களுக்காக தன்னுடைய வாழ்க்கையை சமர்ப்பித்துக் கொள்வதற்கு அவர் பரலோகத்திலிருந்து பூலோகத்திற்கு வந்தார்.

அவர் அவர்களை நோக்கி, மோசேயின் நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் சங்கீதங்களிலும் என்னைக் குறித்து எழுதியிருக்கிறவைகளெல்லாம் நிறைவேற வேண்டியதென்று, நான் உங்களோடிருந்தபோது உங்களுக்கு சொல்லிக் கொண்டுவந்த விசேஷங்கள் இவைகளே என்றார் அப்பொழுது வேதவாக்கியங்களை அறிந்து கொள்ளும்படி அவர்களுடை ய மனதை அவர் திறந்து அவர்களை நோக்கி எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம் நாள் மரித்தோரிலிருந்து தெழுந்திருக்கவும், வேண்டியதாயிருக்கிறது அன்றியும் மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேமில் தொடங்கி சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தின் பிரசங்கிக்கப்படவும் வேண்டியது. நீங்கள் இவைகளுக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள். என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன், நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும்வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார். (லூக்கா 24 : 44 – 49).

அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார் ஆமென். (மத்தேயு 28 : 18–29) ஆதாம் பாவத்திற்கு பிறகு முதன்முறையாக மனிதர்கள் எல்லோருக்கும் பாவமன்னிப்பும் அதிலிருந்து விடுதலையும் தந்தருளி தேவனிடத்தில் சமாதானப்படுவதற்கு இப்பொழுது வழியை ஏற்படுத்தினார்.

கேள்விகள் :

1. இயேசு எந்த சமயத்திலே பூலோகத்திற்கு வந்தார்.

   ............. டிசம்பர் 25, அப்படி என்றால் கிறிஸ்துமஸ் பண்டிகை சொல்லப்படும் நாள்.

   ...............காலம் சம்பூர்ணமானபோது அல்லது ஏற்ற வேலையிலே

   ........ நமக்கு தெரியாது.

2. கேப்ரியல் தென்பட்ட பிறகு, மரியாள் சந்தோஷத்துடன், தேவனுடைய காரியத்திற்காக தயாராக இருந்தாள், என்றாலும் ஜனங்கள் என்ன நினைப்பார்களோ என்று யோசேபு பயந்து விட்டுவிட மனதாயிருந்தார்.

   ............. சரியாக தேவனுக்கேற்றவர்களாக

   ..........சுவாசத்தை பெற்றிருக்கிற எல்லா ஜீவன்களைப்போல

............. தேவனுடைய சாயலிலே.

3. ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மற்றும் தாவீது என்பவர்களுக்கு தேவன் செய்த வாக்குத்தங்கள் எப்படி நிறைவேற்றினாரோ புதிய ஏற்பாட்டின் எழுத்தாளர்கள். சிலர் இயேசுவுடைய வம்சத்தை எழுதினார்கள்.

............ஆம் ......... இல்லை

4. இயேசு கிறிஸ்து அல்லது தேவனுடைய குமாரன் என்பதற்கான தெரியப்படுத்துவதற்காக எப்படிப்பட்ட அடையாளம் காண்பிக்கப்பட்டது.

.............. அற்புதங்கள்
............ யோவானுடைய சாட்சிகள்
..................தேவனுடைய ஆதரவற்ற நிலை
...........மேலே சொல்லப்பட்டவைகள்

5. பூமியில் இயேசு வாழ்ந்த பொழுது அவர் உபதேசம் பண்ணின செய்தி என்ன?

................ மீட்கப்படுதலின் முறை
............. தேவன் மூலம் பாவமன்னிப்பு
............ தேவனிடத்தில் ஒப்புறவாக்கப்படுவது
........... மேலே சொல்லப்பட்டவைகள்

## கிறிஸ்துவை பற்றிய சாட்சியங்கள்

## பாடம் – 12

ஜனங்கள் இயேசுவை மேசியாவாக, கிறிஸ்துவாக, தேவனுடைய குமாரனாக புரிந்துக் கொள்வதற்கே அவர் பூமியில் செய்த ஊழியத்தினுடைய முக்கிய நோக்கமாயிருக்கின்றன. அதினால் சில சாட்சிகள் மூலம் உண்மை என்று நமக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளன.

### யோவான் ஞானஸ்நானன்

யோவான் மனந்திரும்புதலுக்கேதுவான ஞானஸ்நானம் (Baptizo என்ற கிரேக்க மொழியிலே சொல்லப்பட்டிருக்கு. அதற்கு முழுக்கு என்று அர்த்தம்) என்று. யூதருக்கு உபதேசம் பண்ணிக் கொண்டிருந்தார். மற்றும் யூதர்கள்லொரும் யோவனிடம் வந்து மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார்கள். அனுப்பப்பட்டவர்கள் பரிசேயராயிருந்தார்கள். அவர்கள் அவனை நோக்கி, நீர் கிறிஸ்துவுமல்ல, எலியாவுமல்ல, தீர்க்கதரிசியானவருமல்லவென்றால், ஏன் ஞானஸ்நானங்கொடுக்கிறார் என்று கேட்டார்கள். யோவான் அவர்களுக்கு பிரதியுத்தரமாக: நான் ஜலத்தினாலே ஞானஸ்நானங் கொடுக்கிறேன். நீங்கள் அறியாதிருக்கிற ஒருவர் உங்கள் நடுவிலே நிற்கிறார்... ........ மறுநாளிலே யோவான் இயேசுவைத் தன்னிடத்தில் வரக்கண்டு, இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குப்படி எனக்குபின் ஒருவர் வருகிறார் அவர் எனக்கு முன்னிருந்தபடியால் என்னிலும் மேன்மையுள்ளவர் அவருடைய பாதரட்சையின் வாரை அவிழ்ப்பதற்கும் நான் பாத்திரனல்ல என்றான்

மறுநாளிலே யோவான் இயேசுவைத் தன்னிடத்தில் வரக்கண்டு, இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டக்குப்படி. எனக்குபின் ஒருவர் வருகிறார். அவர்............ நான் ஜலத்தினாலே ஞானஸ்நானங் கொடுக்கவந்தேன் என்றான். பின்னும் யோவான் சாட்சியாகச் சொன்னது. ஆவியானவர் புறாவைப்போல வானத்திலிருந்திறங்கி, இவர்மேல் தங்கினதைக் கண்டேன்.... அவர்மேல் ஆவியானவர் இறங்கி யார் மேல் தங்குவதை நீ காண்பாயோ, அவரே பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானங்கொடுக்கிறவர் என்று எனக்குச் சொல்லியிருந்தார். அந்தப்படியே நான் கண்டு இவரே தேவனுடைய குமாரன் என்று சாட்சி கொடுத்து வருகிறேன் என்றான். (யோவான் 1:24 - 27, 29-34 வாசியுங்கள்)

அந்த நேரத்திலே போவானால் ஞானஸ்நானம் பெறுவதற்கு இயேசு கலிலேயாவைவிட்டு யோர்த்தானுக்கு அருகே அவனிடத்தில் வந்தார். யோவான் அவருக்குத் தடைசெய்து நான் உம்மாலே நானஸ்நானம் பெறவேண்டியதாயிருக்க, நீர் என்னிடத்தில் வரலாமா என்றான். இயேசு அவனுக்கு பிரதியுத்தரமாக நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது என்றார். அப்பொழுது அவருக்கு இடங்கொடுத்தான் (மத்தேயு 3 : 13-15)

## பரிசுத்த ஆவி ஞானஸ்நானம்

பரிசுத்த ஆவியானவர் இயேசுவைப் பற்றி சாட்சிக் கொடுத்தார். இயேசு ஞானஸ்நானம் பெற்று, ஜலத்திலிருந்து கரையேற்றினவுடனே இதோ, வானம் அவருக்குத் திறக்கபட்டது. தேவ ஆவி புறாவைப்போல இறங்கி, தம்மே வருகிறதைக் கண்டார். (மத். 3 : 16)

## தேவன் (பிதா)

அன்றியும், வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி, இவர் என்னுடைய நேரகுமாரன். இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது. (மத். 3 : 17) என்று பிதா பரலோகத்திலிருந்து சாட்சிக் கொடுத்தார்.

இயேசு தன்னுடைய ஊழியத்தை தொடங்குவதற்கு முன்பு நாற்பது நாள் உபவாசமாயிருந்தார். கடைசியில் தான் சரீர பெலவீனத்திலே இருக்கும்பொழுது சாத்தான் இயேசுவை சோதித்து இடையூறு பண்ணினான். சாத்தான் இதிலே தொல்வியடையந்தப் போதிலும் தகுந்த வாய்ப்பை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். இயேசு தன்னுடைய ஊழியத்தை தொடங்கினார். முதலாவதாக பன்னிரண்டு சீஷர்களைத் தேர்ந்தெடுத்தார், மக்களிடத்திலே தான் செய்யப்போகின்ற காரியங்களுக்காகவும், மற்றும் உபதேசம் பண்ணப்போகிற எல்லா விஷயத்தையும் சாட்சியாக இருக்கும்படியாக அவர்களை தேர்ந்தெடுத்து, தேவன் தமக்கு துணை இருக்கின்றார் என்று சொல்வதற்கு அநேக அற்புதங்களை செய்தார்.

## பலத்த செய்கைகள், அடையாளங்கள் மற்றும் அற்புதங்கள்

அவர் நியாயப்பிரமானங்களிலும் மற்றும் தீர்க்கதரிசன விஷயங்களிலேயும் கற்றுக் கொள்ளவில்லை. அவர் கற்றுக்கொண்டவர்களாகிய ரப்பிக்களைப்போல, வேதபாரகர், பரிசேகர், சத்துக்கையர்கள் மற்றும் மத குருக்கள் போலவும் இல்லாமல் அதிகாரம் பெற்றவராக போதித்தார். தன்னுடைய உபதேசத்தில் அவர் இவர்கள் எல்லாரையும் சுட்டிக்காட்டி மாயக்காரரே என்றும், அவர்களுடைய மனசு, இருதயம் மற்றும் அவர்களுடைய நடவடிக்கைகள் குருடாக இருக்கின்றது. அவர்கள் அகந்தையிலே அறியாமல் ............

குற்ற குணமுள்ளவர்களாய் இருக்கிறதையும் மற்றும் ஜெப ஆலயங்களிலே அவர்களுக்கேற்றபடி நடக்கவில்லை என்று சொன்னார். அவர் செய்த அற்புதங்கள் எல்லாவற்றையும் பார்த்து, தேவனை மகிமைபடும்படிக்கு மதிலா பிசாசுகள் மூலம் வருகின்ற காரியம் என்று அவர்கள் சொன்னார்கள். மத்தேயு 23 ன்றாம் அதிகாரத்திலே அவர்களைப்பற்றி இப்படி தெரியப்படுத்தினார்.

35 – வ............ அவர்கள் சொல்வார்கள் ஆனால் செய்யமாட்டார்கள்.

5 – வ ......... மனிதர்கள் காணும்படியாக அவர்களுடைய வேலைகள் எல்லாம் செய்வார்கள்.

6 – வ ............ விருந்துகளில் முதன்மையான இடங்களையும் ஜெப ஆலயங்களில் முதன்மையான ஆசனங்களையும் சந்தைவெளிகளில் வந்தனங்களையும், மனுஷரால் ரபீ, ரபீ, என்று அழைக்கப்படுவதையும் விரும்புவார்கள்.

13-வ மாயக்காரராகிய வேதபாரகரோ........ பரிசேயரே! உங்களுக்கு ஐயோ

16 – வ ........... குருடரான வழிகாட்டிகளே! உங்களுக்கு ஐயோ?

33-வ ............... சர்ப்பங்களே, விரியன்பாம்புக் குட்டிகளே! நரகாக்கினைக்கு எப்படித் தப்பித்துக் கொள்வீர்கள்?

அவரை அவர்கள் எப்படியாகிலும் குற்றங்கண்டுபிடிக்க வேண்டும் என்று வகைத் தேடினார்கள் மற்றும் அவரை சோதித்து கேள்விகள் கேட்டார்கள். சோதனைச் செய்துப் பார்த்தார்கள் இருந்தாலும் தோல்வி யடைந்தார்கள். அவருடைய அதிகாரத்தை சவால் செய்தார்கள். இந்தாலும் தோல்வியடைந்தார்கள் லூக்கா-23 ஆம் அதிகாரத்தில் பார்க்கவும்.

## சிலுவையில் அறையப்படுதல்

அவர் தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று சிலுவைப் பற்றிகாரியம் நடந்தபொழுது சம்பவித்த காரியங்கள் வழியாக உறுதிப்படுத்தப்பட்டது. (மத் 27 : 50 – 52) பார்க்கவும்.

1. கடைசியில் இயேசு உரத்த சத்தமாய் கூக்குரலிட்டு தன்னுடைய உயிரை அற்ப்பணித்தார்.

2. அப்பொழுது தேவாலயத்தின் திரைச்சீலை மேல்தொடங்கி கீழ்வரைக்கும் இரண்டாக கிழிந்தது.

3. பூமியும் அதிர்ந்தது, கன்மலைகளும் பிளந்தது.

4. கல்லறைகளும் திறந்தது, நித்திரையடைந்திருந்த அநேக பரிசுத்தவான்களுடைய சரீரங்களும் எழுந்திருந்தது. அவர் உயிர்த்தெழுந்தபின்பு, இவர்கள் கல்லறைகளைவிட்டுப் புறப்பட்டு, பரிசுத்த நகரத்தில் பிரவேசித்து, அநேகருக்குக் காணப்பட்டார்கள்.

## ரோமபுரிய படைவீரர்கள் :

நூற்றுக்கு அதிபதியும், அவரோடே கூட இயேசுவைக் காவல்காத்திருந்தவர்களும், பூமியதிர்ச்சியையும் சம்பவித்த காரியங்களையும் கண்டு, மிகவும் பயந்து, மெய்யாகவே இவர் தேவனுடைய குமாரன் என்றார்கள். (மத். 27 : 54).

### அவருக்கு நண்பர்களாகிய அப்போஸ்தலர்கள் :

அப்போஸ்தலர்கள் இயேசுவைப் பற்றி சாட்சிக் கொடுத்தார்கள் ஆதலால், யோவான் ஞானஸ்நானங்கொடுத்த நாள் முதற்கொண்டு கர்த்தராகிய இயேசுவானவர் நம்மிடத்திலிருந்து உயர எடுத்துக் கொள்ளப்பட்ட நாள் வரைக்கும், அவர் நம்மிடத்தில் சஞ்சரித்திருந்த காலங்களிலெல்லாம் எங்களுடனேகூட இருந்த மனுஷர்களில் ஒருவன் அவர் உயிரோடெழுந்ததைக் குறித்து, எங்களுடனேகூடச் சாட்சியாக ஏற்படுத்தப்படவேண்டும் என்றான். (அப். 1 : 21, 22). ஆதிமுதல் இருந்ததும் நாங்கள் கேட்டதும், எங்கள் கண்களினாலே கண்டதும், நாங்கள் நோக்கிப் பார்த்ததும், எங்கள் கைகளினாலே தொட்டதுமாயிருக்கிற ஜீவவார்த்தையைக் குறித்து, உங்களுக்கு அறிவிக்கிறோம். அந்த ஜீவன் வெளிப்பட்டது, பிதாவினிடத்திலிருந்ததும், எங்களுக்கு வெளிப்பட்டதுமான நித்தியமாயிருக்கிற அந்த ஜீவனை நாங்கள் கண்டு, அதைக் குறித்துச் சாட்சிக்கொடுத்து, அதை உங்களுக்கு அறிவிக்கிறோம் .................. (1 யோவான் 1 : 1-3)

### கேள்விகள் :

1. அவர் ஞானஸ்நானம் பெற்ற உடனே தண்ணீரிலிருந்து தரைக்கு வந்தார். அப்பொழுது வானத்திலிருந்து ஒரு சத்தம் இதோ இவரே என்னுடைய நேசக்குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று சொன்னார்.

   ..................... ஆம் ............. இல்லை

2. இயேசு அதிகாரமுள்ளவராக போதித்தார், எதற்கேன்றால் அவர் பிற ரப்பீக்களைப் போல யூதர்களுடைய பள்ளிகளிலே அவர் பயிலவில்லை.

   ..................ஆம் ........... இல்லை

3. பரிசேயர்கள் மற்றும் சத்துக்கையர்களை பற்றி இயேசு என்ன சொன்னார்?

   ........................ குருடர்களுக்கு வழிக்காட்டுகிறவர்கள்.
   ........................ மாயக்காரர்கள்
   ........................ உண்மையுள்ளவர்கள்
   ........................ ஏ மற்றும் பி.

4. இயேசுவுக்கு நண்பர்களாகிய அவருடைய சீஷர்கள் அவர் செய்த அற்புதங்களையும் பற்றியும் அவருடைய மரணம், அடக்கம் மற்றும் உயிர்தெழுதலைக்குறித்து சாட்சிக்கொடுத்தார்கள்.

   ..................ஆம் ........... இல்லை

5. இயேசுவைப் பற்றிய சாட்சி சொன்னவர்கள்.

.............. யோவான் ஸ்நானன்
.............. பரிசுத்த ஆவி
.............. பிதா
.............. மேலே கொடுக்கப்பட்டவைகளெல்லாம்.

## ஊழியம் – தொடக்கம்

## பாடம் – 13

யோவான் 1 : 1-4 ல் இப்படி சொல்லப்பட்டிருக்கு, ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்து, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று, உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை. அவருக்குள் ஜீவன் இருந்தது. அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது.

குமாரனாகிய தேவன், பிதாவாகிய தேவனிடத்தில் மற்றும் பரிசுத்த ஆவி தேவனிடத்தில் பரலோகத்தில் இருக்கின்ற மகிமையின் மகா ஐஸ்வர்யத்தை விட்டு, மானிடர் பாவத்திற்காக பூலோகத்திற்கு வந்து பழுதற்ற பலியாக சமர்ப்பித்து கொண்டார்.

மனிதர்களை தேவனிடத்தில் சமாதானப்படுத்துவதற்கு ஒரு பரிசுத்த பலியாக தேவைப்பட்டார். அவர் பெத்லகேமுக்கு செல்வதும் எகிப்துக்கு ஓடிப்போவதும் மற்றும் தேவனுடைய தயவிலும் மற்றும் மனிதர் தயவிலும் வளர்ந்தார். நாசரேத்திலுள்ளவர்கள் அவரை தச்சனாகிய யோசேப்பின் குமாரன் என்று சொல்லப்பட்டார் இவைகள் இப்படி நிகழ்ந்தன.

பன்னிரண்டு வயது இருக்கும்பொழுது அவர் எருசலேமில் இருக்கும்படிக்கு தீர்மானம் பண்ணினார் மற்றும் தேவாலயங்களிலே போதகர்கள் சொல்வது கேட்டுக்கொண்டு அவர்களை அநேக கேள்விகளை கேட்டு, அவர்களுடைய கேள்விகளுக்கு விடைகளை சொன்னார். இருபத்து ஒன்று வயது இருக்கும்பொழுது அதன்பின் நடந்த அவருடைய மரணத்தைப்பற்றி குற்றம்பிடித்த அதிகாரர்கள் ஒருவேலை இருந்திருக்கலாம். எருசலேமில் இருக்க போகிறதைப் பற்றி யோசேபும், மரியாளும் இயேசுவை கேள்விக் கேட்டபொழுது அவர் இப்படி பதில் சொன்னார். அதற்கு அவர் நீங்கள் ஏன் என்னை தேடினீர்கள்? என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்க வேண்டியதென்று அறியீர்களா என்றார். (லூக்கா 2 : 49) பின்பு அவர் அவர்களுடனே கூடப்போய், நாசரேத்தூரில் சேர்ந்து அவர்களுக்குக் கீழ்ப்படிந்திருந்தார். அவருடைய தாயார் இந்தச் சங்கதிகளையெல்லாம் தன் இருதயத்திலே வைத்துக் கொண்டாள்.

இயேசுவானவர் ஞானத்திலும் வளர்த்தியிலும், தேவக்கிருபையிலும் மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார். (லூக்கா 2 : 51-52). அவர் பரலோகத்தை விட்டு வசனரூபத்திலே இருந்து மாம்சமாகி, பூலோகத்திற்கு வந்தக் காரணத்தை நிறைவேற்றுவதற்காக முப்பதாவது வயதிலே தன்னுடைய ஊழியத்தைத் தொடங்கினார். யோவான் மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானம்

கொடுக்கும்போது இயேசு அவரிடம் வந்து அவரிடம் ஞானஸ்நானம் பெறுவது அவருக்கு மனதில்லை, இருந்தாலும் அவர் இப்படிச் சொன்னார். இயேசு இப்பொழுது இடங்கொடு, இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது என்றார். அப்பொழுது அவருக்கு இடங்கொடுத்தான். இயேசு ஞானஸ்நானம் பெற்று, ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, இதோ வானம் அவருக்குத் திறக்கப்பட்டது. தேவ ஆவி புறாவைப்போல இறங்கி தம்மேல வருகிறதைக் கண்டார். அன்றியும், வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி, இவர் என்னுடைய தேவகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது. (மத் 3 : 15–17). இயேசுவுடைய ஞானஸ்நானத்திற்கு முன்னதாக யோவான்ஸ்நானன் சொன்ன செய்திகளை இயேசு ஞானஸ்நானத்திலே நிரூபித்துக் கொண்டார். இயேசு நாற்பது நாள் உபவாசம் இருக்கும்படிக்கு வனாந்திரத்திற்குக் கொண்டு போகப்பட்டார். அங்கே சோதனைக்காரன் மூலம் நம்மைப் போல சோதனைகள் எதிர்கொண்டார்.

1. உணவுக்காக பசியாய்யிருப்பது ............... சரீர இச்சை
2. அதிகார்ததை விரும்புவது ..................... ஜீவனத்தின் பெறுமை
3. பொருட்களை விரும்புவது ................. கண்களின் இச்சை

ஒவ்வொரு சோதனைகளில் அவர் மிகவும் கீழ்ப்படிதலோடே நிதானமாக இருந்தார். இருந்தாலும் அவர் பாவம் செய்யவில்லை. ஒவ்வொரு சமயங்களில் இயேசு சொன்ன வார்ததைகள்தான் பிதாவினுடைய சித்தத்தின்படி செய்வது மற்றும் பிதாவினுடைய பணிகளைச் செய்வது. அதை நிறைவேற்றுவது என்பதை நாம் நாம் கவனிக்கவேண்டும். நாமும்கூட நம்முடைய எண்ணங்களிலும், மற்றும் தீர்மானங்களிலும், தேவனுடைய சித்தத்தின்படி செய்வதற்கு சார்ந்து வாழவேண்டும். பரிசுத்த ஆவியின்மூலம் நடத்தப்பட்ட அப்போஸ்தலர்கள் சொன்ன காரியங்களை நாம் மிகவும் ஜாக்கிரதையாகப் படித்து பின்பற்றவேண்டும். இந்த காரியங்கள் நமக்கு புதிய ஏற்பாட்டிலே எழுதப்பட்டிருக்கின்றன. சுவிசேஷம் நம்மை தேவனிடம் ஒப்புரவு படுத்துகின்றது. அந்தச் செய்தி நமக்கு அறிவித்து நம்முடைய பாவத்திற்கு மன்னிப்பு கிறிஸ்துவுக்குள் நாம் அறிவதற்கு வழி நமக்கு இருக்கின்றன. அவரை பூலோகத்திற்கு அனுப்பின பிதாவுடைய சித்தத்தை நிறைவேற்றுவதன்மூலமாக அவர் எதிர்க்கொண்ட ஒவ்வொரு சோதனைகளிலும் அவர் மிகவும் எளிதாக வெற்றியடைந்தார். நாம் தேவனுடைய சுவரூபத்திலே சுருஷ்டிக்கப்பட்டோம். அதினால் நாம்கூட இப்படிப்பட்ட வெற்றியை பெறுவதற்கு வழிகள் இருக்கின்றன. அது தேவனுக்குக் கீழ்ப்படிதலின் மூலம் நடக்கம்.

கேள்விகள் :

1. யோவான் சொன்னபடி ஆதியிலே பிதாவாகிய தேவனிடத்தில் யார் இருந்தார்?

....................... வார்த்தை
....................... பரிசுத்த ஆவியானவர்
....................... (அ) மற்றும் (ஆ)

2. குமாரனாகிய தேவன், பழுதற்ற பலியாக, தேவனுடைய சுவரூபமாக செய்யப்பட்ட மனிதனை தேவனுடனே சமாதானப்படுத்துவதற்காக அந்த மனிதர்கள் மூலமாக கொள்ளப்படுவதற்கு பூலோகத்திற்கு வந்தார்.

.......................ஆம் .............. இல்லை

3. யோவானிடம் இயேசு எதற்காக ஞானஸ்நானம் எடுத்துக்கொண்டார்.

.................. மோசேயின் நியாயப்பிரமானத்தை ஒன்றுப்படுத்துவதற்காக
..................... தன்னுடைய பாவங்கள் மன்னிக்கப்படும்படியாக
......................... எல்லா நீதியையும் நிறைவேற்றுவதற்காக.

4. இயேசு சாத்தானுடைய இச்சைகளின்மூலம் இழுக்கப்பட்டு சாத்தான்மூலம் சோதிக்கப்படவில்லை, எதற்காக என்றால் அவர் மனிதன்அல்ல, அப்படியானால் அவர் இரத்த மாம்சம் உடையவர்ரல்ல. ஆனால் ஆவியின் சுரூபம் உடையவர்.

.........................ஆம் ................ இல்லை

5. நம்முடைய விசுவாசம், தீரமானங்கள் தேவனுடைய சித்தத்தின்படி சார்ந்து இருக்கும்படிக்கு நாம் பரிசுத்த வேதாகமத்தை மிகவும் உன்னிப்புடனும் மற்றும் உண்மையுடனும் படிக்கவேண்டும்.

..................ஆம் ............... இல்லை

## கிறிஸ்து பிதாவினுடைய சித்தத்தை நிறைவேற்றுவது

## பாடம் – 14

யோவான் ஸ்நானன் - இயேசுவைப்பற்றி தேவனுடைய ஆட்டக்குட்டி என்று தன்னுடைய சீஷர்களுக்குச் சொன்னார். இயேசு ஞானஸ்நானம் பெற்றபோது தேவன் அவரைப்பற்றி தன்னுடைய குமாரன் என்றும் மற்றும் அவரிடம் இவர் பிரியமாயிருக்கிறார் என்று தெரியப்படுத்தினார். இயேசு யூதர்களுக்கு தேவனுடைய இராஜ்ஜியத்தை பற்றி போதித்து, அவருடைய வார்த்தைகளின்மூலம் அநேக அற்புதங்களைச் செய்து காண்பித்தார். சீஷர்கள் கூட அந்த காரியங்களை இல்லை என்று சொல்வதற்கு இடம் இல்லாதிருந்தது. அவைகள் ஜனங்களின் மத்தியில் நடந்தன. அவைகளில் எ–டு : சில மீன்கள் மற்றும் சில அப்பங்கள் அநேக ஆயிரம்பேருக்கு உணவுக் கொடுத்த காரியம் மற்றும் ஒரு அடக்கம் செய்வதற்கு இருந்த சமாரி காரியத்தைக் கூட நிறுத்தினார். அவர் ஒரு விதவையுடைய மகனை மறுபடியும் எழுப்பினார். குருடர்களையும், குஷ்ட வியாதியுள்ளவர்களையும் குணமாக்கினார். அவர்களுடைய வாழ்க்கையை குணமாக்கினார். அந்த பட்டணத்திலுள்ளவர்களெல்லாரும் அதை பார்த்தார்கள். அவர் அடக்கம் பண்ணுகிற தோட்டத்துக்கு சென்றார். அப்போதைக்கே அழிகிற நிலையிலே இருக்கின்ற ஒரு பிணத்தை சமாதியிலிருந்து எழுப்பினார். அவருடைய வார்த்தைகள் மற்றும் அற்புதங்கள் அறிஞர்கள் மற்றும் ஜெப ஆலயத்தில் இருக்கின்ற பெரிய நாயகர்கள் அவரை தேவனடைய குமாரன் என்று உறுதி படுத்தினார்கள். அவர்கள் அவர்மேல் விசுவாசம் வைத்தார்கள் இருப்பினும் யூதர்களுடைய பெரியவர்கள் விசுவாசம் வைக்கவில்லை. அவர்கள் இன்னும் நிரூபிக்க வேண்டுமென்றார்கள்.

அவர் ஊழியத்தில், சில காலம் சென்ற பிறகு நான் கைதியடைய போகிறதையும் மற்றும் சிலுவையில் அறையப்பட போகிறதையும் பற்றி தன்னுடைய சீஷர்களுக்கு முக்கியமாக பன்னிரண்டு பேருக்கு தெரியப்படுத்த தொடங்கினார்.

பூமியிலே முதலாவது தமது ஊழியத்தை தொடங்கின நேரமுதல் ஊழியத்தில் எல்லா காரியங்களும் நடக்கப்போகிற சிலுவை காரியத்திற்கு ஏற்றபடி நடந்தது. சாத்தான் தலை, ஏவால்லுடைய சந்ததி மூலம் இப்படி நசுக்கப்பட்டது.

- அவருடைய பரிபூரண கீழ்ப்படிதல் மூலம்

- அவருடைய மரணம் என்றால் பாவத்திற்காக சம்பூர்ணபலி கொடுத்தார்.

- அவருடைய உயிர்த்தெழுதல் என்றால் மரணம் அடக்க அதிலிருந்து ஜெபம் பெற்று தேவனுடனே சமாதானத்திற்காக வழியை ஏற்படுத்தினார்.

அவர் கட்டளைகளில் தன்னுடைய திட்டத்திலே நாம் நன்றாக புரிந்துக் கொள்ள முடியாமல்லிருந்தாலும், நம்முடைய கீழ்ப்படிதலை விரும்புகிறார். காயின் கலியைவிட ஆபேல் பலியை தேவன் எதற்காக சந்தோஷப்பட்டார்? எதற்காக வீட்டுத்தொரன கதவுகளிலே இரத்தத்தை பூசினார்கள் அவர்களுடைய தலைப் பிள்ளையை கொள்ளவில்லை? விசேஷ பலிகளின்மூலமாக மரிக்க போகிறவர்களை உயிர்ப்பிக்கும் பொருட்டு எதற்காக ஒரு வெண்கலச் சர்ப்பத்தை உண்டாக்கி உயர்த்தப்பட்டன (எண். 21 : 8,9) ஒருவேளை தேவனுடைய திட்டம் நாம் அறிந்திருக்கலாம், அறியாமலும் இருக்கலாம் இருந்தும் நாம் தேவனுடைய கட்டளைகளை கைக்கொள்ளவேண்டும். தேவனிடம் பூரண நம்பிக்கையும் மற்றும் கீழ்ப்படிதல் வழியாக தேவனுடைய கட்டளைகளைக் கைக்கொள்ள வேண்டும், மனிதனுடைய மனத்திற்கு பிடித்தது போன்று கஷ்டமாக இருந்தாலும், அவர்கள் தேவனுடைய வார்த்தைகள் நம்பிக்கையுடன் பின்பற்றவேண்டும்.

ஆதலால், அவர் நம்முடைய பாவங்களுக்காக........ பரிபூர்ண பலியாக அற்ப்பித்துக் கொள்வதற்கு பூர்ண கீழ்ப்படிதல் மூலம் எருசலேமுக்கு சென்றார். யூதர்கள் இயேசுவை கொள்வதற்கு அவர்மேல் குற்றம், துவேஷம் வைத்து, அறுவறுப்படைந்து அவர் மேல் கர்வத்துடன் நடந்துக்கொண்டு, அவரைக் கொள்வதற்கு குற்றம்பிடித்து, ஒருவர் மூலம் அவரை பிடிக்க வகைத்தேடினார்கள். ரோமர்களுடைய நியாயதிபதி அவரைக்குற்றமற்றவர் என்று தீர்ப்புக் கொடுத்தார். இருந்தாலும் யூதர்களுடைய சந்தோஷத்திற்காக இயேசுவைக் கொள்வதற்கு ஒத்துக் கொண்டார். அதற்கு இணங்கினார். இயேசு தன்னுடைய இஷ்டத்தின்படியே தன்னுடைய வாழ்க்கையை மனிதர்களுடைய பாவங்களுக்காக சம்பூர்ண பலியாக சமர்ப்பித்துக் கொண்டார். மறுபுத்திரர் எல்லோரும் அவர் மேல் விசுவாசம் வைத்து கீழ்ப்படிதல் மூலம் தேவனோடே அவர்களை ஒப்புரவாக்குவதற்காக வழியை உண்டுப்பண்ணினார்.

ஆதம் பாவத்தின்வழியாக தேவனை விட்டு விலகினான். மனிதர்கள் மறுபடியும் தேவனிடமிரந்து இரட்சிப்புடைவதற்கு அவர் ஓர் திட்டம் வகித்தார். தேவன் கிறிஸ்துவுக்குள் தன்னுடைய சித்தத்தை உலகத் தோற்றத்திற்கு முன்பாக தீர்மானம் பண்ணி அது நிறைவேற்றுவதற்கு கிறிஸ்துவை அனுப்பி இந்த உலகத்திற்கு சமாதான சுவிசேஷத்தை வெளிப்படுத்தினார் (எ.பே. 1 : 36) (ரோமர் 8 : 28, 29), (யோவான் 17 : 5) வசனங்களைப் படியுங்கள். அதுதான் சமாதான செய்தி.

கேள்விகள் :

1. அவருடைய சம்பூர்ணத்திற்காக நாம் விசுவாசித்து பூர்ணமாக புரிந்துக் கொண்டாலும் இல்லை என்றாலும் அவருக்கு கீழ்ப்படிதவற்கு தேவன் நம்மிடமிருந்து கீழ்ப்படிதலை எதிர்ப்பார்க்கிறார்?

....................... ஆம் .......... இல்லை

2. எருசலேமுக்கு மறுபடியும் சென்றால் அவர் மரணம் அடைவார். இயேசு அதற்காகவே அங்கேச் சென்றார். அதற்காகத்தான் அவர் பூலோகத்திற்கு வந்தார்.

....................... ஆம் .......... இல்லை

3. இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று காண்பிப்பதற்காக எந்தக் காரியம் இயேசு மூலம் செய்யப்பட்டன.

................. அற்புதங்கள்
................ யோவான் ஸ்நானன்
.................. தன்னைப் பற்றித்தான் சொன்ன இயேசுவின் வார்த்தைகள்
................ மேலே கொடுக்கப்பட்டவைகளெல்லாம்.

4. இயேசு தன்னுடைய ஊழியத்தின் கடைசியிலே எருசலேமுக்கு போவதற்கு காரணம்.

................. பஸ்காவுக்காக சீஷர்கள் கேட்டதினால்
................. ஒவ்வொருவரும் போகவேண்டும் என்று ரோம அரசாங்கம் கட்டளையிட்டதினால்
................. அவர் தேவனுடைய குமாரன் என்று தெரியப்படுத்துவதற்காக

5. பிலாத்து, ரோம, அதிகாரி அவரைக் குற்றமற்றவர் என்று அறிந்தார்கள்.

....................... ஆம் .......... இல்லை

## சுவிசேஷ செய்தி

## பாடம் – 15

அன்பு, தயவு, சாந்தம், உண்மை மற்றும் சத்தியம் என தேவனுடைய குணங்களில் மனிதனை அவர் சிருஷ்டித்தார். தோட்டத்தை கண்காணிக்கவும் மற்றும் நல்லது கெட்டது என்று அறியக்கூடிய விருட்ஷத்தை உன்னைக் கூடாதேன்று அவர் மனிதனுக்கு கட்டளையிட்டார். உண்மைக்கு தேவனுடைய சுபாவமாகிய நல்லதைப்பற்றி மனிதனுக்கு மாத்திரம்தான் தெரியும். நல்லது என்றால் அது சாத்தானுடைய குணம் அல்ல. மனிதன் தேவன் மூலம் கட்டளைப்பெற்றிருக்கின்றான் என்றால் மனிதனுக்கு யோசனை செய்வதும், காரணத்தைக் கண்டுபிடிப்பதும் மற்றும் முடிவு எடுக்கவும் அவனுக்கு சாமர்த்தியம் இருக்க என்றும் தெரியும். ஒரு பொய்யை நம்புவது மற்றும் அதைப் பின்பற்றுவதற்கு தேர்ந்தெடுக்கவும் அவனுக்கு சாமர்த்தியம் இருக்கும் என்று அறிந்துக்கொள்ள முடிகின்றது. இப்படிப்போல தேவனிடம் மனிதனுடைய கீழ்ப்படியாமை மூலம் சாத்தான் அவன்மேல் அதிகாரம் செய்வதினால் அது மரணத்திற்கு வழிவகுத்தது. அதினால்

மனிதர்களுடைய பாவங்கள் எடுத்துப் போடுவதற்கும் மற்றும் மரணத்தின்மேல் அதிகாரத்தினால் ஒரு மீட்பர் தேவைப்பட்டார். அதனால் மனிதனுடைய பாவங்கள் எடுத்துப் போடுவதற்கு ஆடுகளும், செம்மறியாடுகளும் அதனுடைய இரத்தம் எடுத்து போட சாத்தியம் இல்லை. (எபி. 10 : 14)

விடுதலை கிறிஸ்துவுக்குள் தெரிந்துக் கொள்ளலாம். அது எப்படி என்றால் கிறிஸ்து சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிதல் மூலம் மனிதனுக்கு விடுதலை பெற முடியும். அந்த கிறிஸ்து சுவிசேஷ செய்தி என்னவென்றால்,

- ஆதியிலே வார்த்தை இருந்தது. அவரே இயேசு கிறிஸ்து அபிஷேகம் பெற்ற மேசியா.

- அந்த வார்த்தை மாம்சத்தில் வந்து நம்மிடத்தில் வாழ்ந்தார்.

- கிறிஸ்துவினுள் எந்த பாவம் இல்லை.

- சிலுவை மரணத்திற்கு அவர் கீழ்ப்பட்டார்.

- சாத்தானுடைய கையிலிருந்து மனிதனை விடுதலைப் பண்ணி பாவத்தின் மூலம் மரணம் ஜெயிக்கிறதுபோல தேவன் அவரை மரணத்திலிருந்து எழுப்பினார்.

- கிறிஸ்து எங்கே இருந்து வந்தாரோ அங்கே என்றால் பரலோகத்திற்கு ஏறிச்சென்றார்.

- அவருடைய இரத்தம் மூலம் யார்ரெல்லாம் பாவ மன்னிப்புப் பெற்றுக் கொள்கிறார்களே அவர்கள் விசுவாசத்தில் நிலைத்து இருந்தால் நித்திய ஜீவனை பெறுவார்கள் என்று அவர் உபதேசம் பண்ணினார்.

அவருக்குள் நாம் சமாதானம் பெற்றிருக்கின்றோம் இயேசு இப்படிச் சொன்னார். நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன் என்னாலேயன்றி யாரும் பிதாவினிடத்தில் வரமாட்டான் என்று சொன்னார். யோவான் 14 : 6, மற்றும் அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படைவதே தேவனை அன்புக் கூர்வது. அவருடைய கட்டளைகள் சுமையானவர்கள் அல்ல (2 யோவான் 5 : 3)

## ஒரு இரட்சகர் வருவார் என்று தீர்க்கதரிசனம் சொல்லப்பட்டிருக்கின்றது :

ஆப்பிரகாம் மூலம் பூமியில் மீதேங்கும் ஜனங்கள் எல்லாரும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கின்றன. தேவனுடைய வசனம் 4வது பாடத்தில் படித்தோம். தேவன் தாவீதைப் பற்றி சொன்னபோது, அவன் என் நாமத்தின் கனத்திற்காக ஒரு ஆலயத்தைக் கட்டுவான். அவனுடைய சிங்காசனத்தை நித்தியமும் அஸ்திபாரப்படுத்துவேன் (2 சாமுவேல் 7 : 13) மற்றும் ஏசாயா இப்படி தீர்க்கதரிசனமாக சொன்னார். ஆதலால் ஆண்டவர் தாமே உங்களுக்கு ஒரு அடையாளத்தைக் கொடுப்பார். இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று போடுவாள் (ஏசாயா 7 : 14).

அநேக வணக்கங்கள் சொல்வதின்மூலம் கேப்ரியல் தூதன் கன்னிகை மரியாளிடம், அவள் ஒரு குமாரனைப் பெறுவாள் என்று சொன்னார். இதோ, நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக அவர் பெரியவராயிருப்பார். உன்னதமானவருடைய குமாரன்

எனப்படுவார். கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார். அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார். அவருடைள ராஜ்யத்துக்கு முடிவிராது என்றார். (லூக்கா 1: 31-33)

## இரட்சகர் பற்றிய சாட்சி

கேப்ரியல் தூதன் மேசியவுடைய பிறப்பைப்பற்றி வெளிப்படுத்தினார். யோவான்ஸ்நானன் இப்படி சாட்சிக்கொடுத்தார். அவன் மறுதலியாமல் அறிக்கையிட்டதுமின்றி, நான் கிறிஸ்து அல்ல என்றும் அறிக்கையிட்டான். யோவான் 1: 20 படியுங்கள். மத்தேயு யோர்த்தான் நதியிலே அவர் ஞானஸ்நானம் பெற்றபோது, உண்டாகி, இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது. (மத் 3 : 17)

தன்னுடைய சொந்த கிராமத்தில் நாசரேத்திலே ஜெப ஆலயத்தில் இயேசுவானவர், ஏசாயா புத்தகத்திலிருந்து படித்தார். அப்பொழுது ஏசாயா தீர்க்கதரிசியின் புஸ்தகம் அவரிடத்தில் கொடுக்கப்பட்டது அவர் புஸ்தகத்தை விரித்தபோது, கர்த்தருடைய ஆவியானவர் என் மேலிருக்கிறார். தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம் பண்ணினார், இருதயம் நருங்குண்டவர்களை குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசத்தப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும், கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும், என்னை அனுப்பினார் என்று எழுதியிருக்கிற இடத்தை அவர் கண்டு, வாசித்து, புஸ்தகத்தைச் சுருட்டி பணிவிடைக்காரனிடத்தில் கொடுத்து, உட்கார்ந்தார், ஜெப ஆலயத்திலுள்ள எல்லாருடைய கண்களும் அவர்மேல் நோக்கமாயிருந்தது. (லூக்கா 4 : 17-20)

இயேசு இந்த தீர்க்கதரிசன வசனத்தை உறுதிப்படுத்துவதற்கு அநேக வியாதியுள்ளவர்களையும், குருடர்களையும், ஊமையுள்ளவர்களையும் குணமாக்கினார் மற்றும் பரிசுத்தவர்களை மரித்தொரிலிருந்து எழுப்பினார். ஒருவரை அவருடைய சரீரம் அழுகின நிலையிலும் இருந்தாலும் அதிலிருந்து எழுப்பினார் இப்படி அவருடைய சக்தி மற்றும் அதிகாரத்தை பெற்று தேவனுடைய குமாரனாகவும் மனுஷகுமாரனாகவும் நிரூபித்தார்.

மனுஷர்களிடமிருந்து பாவத்தை நீக்குவதற்கு ஒரு பாவமில்லா பலி தேவைப்படுகின்றது. அதினால் கிறிஸ்து தன்னுடைய சரீரத்தை பலியாக தன்னைத்தான் ஒப்புக்கொடுத்தார். சிலுவையில் மரித்து, அடக்கம் செய்யப்பட்டு மற்றும் உயிர்த்தெழுதலின்மூலம் தேவன் இயேசுவுடைய பலியை ஏற்றுக் கொண்டார். மற்றும் தேவனுடைய ரூபத்திலே இருந்து தன்னுடைய சுருஷ்டியிலே ஒரு பாகமாகிய இரத்த மாமிசமாகிய தன்னுடைய உடம்பிலே பூமியில் இருக்கும்படிக்கு தீர்மானம் செய்தார். இது எல்லாம் எதற்காக? எதற்காக என்றால் இயேசு தேவனுடைய குமாரநேன்றும், பாவத்தை மன்னிப்பதற்கு சக்தி மற்றும் அதிகாரம் பெற்று இருக்கின்றார். கிறிஸ்துவுக்கு எல்லா மனிதர்களுக்கும் பாவங்களுக்கு மன்னிப்பு உண்டென்று மனிதர்கள் தெரிந்துக் கொள்ளவேண்டும்.

ஜனங்களெல்லாரும் அவருடைய உபதேசத்தைக் கேட்டார்கள். இருந்தாலும் புரிந்துக் கொள்ளவில்லை அவர்களுடைய வழிபாடுகளிலிருந்து மிக்க மாறாக இருந்தார்கள். அவருடைய

உபதேசம் ஒரு அன்பு செய்தி. அவருடைய உபதேசம் இப்படிச் சொல்லப்பட்டிருக்கின்றது.

லூக்கா 19 : 10 இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷ குமாரன் வந்திருக்கிறார் என்றான். மத்தேயு 11128 வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். 2 பேதுரு 3 : 9, தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி கர்த்தர் தமது வாக்குத்தத்ததைக் குறித்துத் தாமதமாயிராமல், ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி நம்மேல் நீடிய பொருமையுள்ளவராயிருக்கிறார். அப்போஸ்தலர் 4 : 11-12 வீடு கட்டுகிறவர்களாகிய உங்களால் அற்பமாய் எண்ணப்பட்ட அவரே முலைக்குத் தலைக்கல்லானவர். அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும். மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான். எபேசியர் 1 : 6-9 தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே, நம்மை இயேசு கிறிஸ்து மூலமாய்த் தமக்கு சுவிகாரபுத்திரராகும்படி முன் குறித்திருக்கிறார். அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவ மன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உணடாயிருக்கிறது. அந்தக் கிருபையை அவர் அவர் சகல ஞானத்தோடும் புத்தியோடும் எங்களிடத்தில் பெருகப் பண்ணினார். காலங்கள் நிறைவேறும்போது விளங்கும் நியமத்தின்படி பரலோகத்திலிருக்கிறவைகளும் பூலோகத்திலிருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்பட வேண்டுமென்று தமக்குள்ளே தீர்மானித்திருந்த தம்முடைய தயவுள்ள சித்தத்தின் இரகசியத்தை எங்களுக்கு அறிவித்தார்.

1. கொரிந்தியர் 15 : 1-4 அன்றியும் சகோதரரே, நான் உங்களுக்கும் பிரசங்கித்த சுவிசேஷத்தை மறுபடியும் உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன் நீங்களும் அதை ஏற்றுக் கொண்டு, அதிலே நிலைத்திருக்கிறீர்கள்.

நான் உங்களுக்குப் பிரசங்கித்த பிரகாரமாய் நீங்கள் அதைக் கைக்கொண்டிருந்தால், அதினாலே நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள்; மற்றப்படி உங்கள் விசுவாசம் விருதாவாயிருக்குமே.

## கேள்விகள் :

1. மனிதனின் பாவத்திற்காக சம்பூர்ணபலியாக தன்னைத்தான் ஒப்புக்கொடுத்தார். அதற்காக தேவனுடைய குமாரனாகிய இயேசு மனித ரூபத்திலே பூமிக்கு வந்தார்.

   .............ஆம் ...........இல்லை

2. இயேசு சரிவவல்ல அதிகாரத்தையும் மற்றும் தேவனுடைய சக்தி பெற்றிருப்பதற்கு ஆதாரம் இல்லை.

   .............ஆம் ...........இல்லை

3. இரட்சிப்பு எங்கே பெற்றுக் கொள்ளமுடியும்.

   1. சம்பிரதாயத்திலே 2. இயேசு கிறிஸ்துவுக்குள் 3. மோசேவுக்குள் 4.

4. சுவிசேஷச் செய்தி என்றால், கிறிஸ்துவின் வாழ்க்கை, மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் பரலோகத்திற்கு செல்வது, நமக்கு பாவ மன்னிப்பு தந்து, தேவனிடம் சமாதானப்படுத்துவதும்

.............ஆம் ...........இல்லை

5. பிதாவினிடம் இருந்து வந்து அவருடன் சமாதானப்படுவதற்கு நமக்கு அநேக வழிகள் இருக்கின்றன.

.............ஆம் ...........இல்லை

## கிறிஸ்து – தன்னுடைய சபையை

## பாடம் – 16

இயேசு தன்னுடைய பூலோக ஊழியத்திலே, தன்னுடைய சீஷர்களை இப்படிக் கேட்டார். அதற்கு அவர் அப்படி என்றால் நீங்கள் என்னை யார் என்று நினைக்கிறீர்கள் என்று அவர் கேட்டார். அதற்கு சீமோன் பேதுரு பிரதியுத்தரமாக : நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான். இயேசு அவனை நோக்கி :- யோனாவிக் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான், மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார். மேலும், நான் உனக்குச் சொல்லுகிறேன். நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின் மேல் என் சபையைக்கட்டுவேன். பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை. (மத்தேயு 16 : 15-18).

சபை என்ற வார்த்தைக்கு கிரேக்க மொழியில் எக்கிலிசியா (ekklesia) என்று சொல்லப்பட்டிருக்கின்றன. அதற்கு அர்த்தம் என்னவென்றால் அழைக்கப்பட்டவர்கள், என்றால் ஒரு குழு அல்லது ஒரு விசேஷமாக மதசம்பந்தமான ஒரு சபை (யூதர்களுடைய ஜெப ஆலயம் அல்லது, பூமியின் மீது கிறிஸ்துவ மார்க்கச் சபை அல்லது பரலோகத்திலே பரிசுத்தர்கள் அல்லது இவை இரண்டும் (ஸ்ராங்ஸ் கிரேக்க / எபிரேய அகராதியில்). அவரை துஷிக்கிற குழு சமக்ஷத்திலே நடந்த ஒரு விசாரணையிலே வித்தியாசமும் தீர்ப்பு பிறகு, ரோமர் அரசாங்கம் தேவனுடைய குமாரனை சிலுவையில் அறைந்தார்கள். அவர்மேல் குற்றம் சுமத்தி, ஒரு குற்றவாளியைப்போல், ராஜாக்களுக்கெல்லாம் ராஜாவாகிய நாசரேயனாகிய இயேசுவை சிலுவையில் அறைந்து, மாயக்காரராகிய அந்த யூதர்கள் மதவாதிகள் அவரை தூஷித்தார்கள் மற்றும் சிலுவை நடைப்பெறுவதைப் பார்த்து, அவர்கள் சந்தோஷித்தார்.

அவர் மரித்தபோது முன்னதாக மூன்று மணியிலே எருசலேம் மீதெங்கும் இருள் சூழ்ந்தது. இயேசு மரித்தப்போது முன்னதாக போவான் சொன்ன வார்த்தை இப்படிச் சொன்னார். (யோவான் 10 : 19-20), இந்த வார்த்தைகளினாலே யூதர்களுக்குள்ளே பிரிவினை நிகழ்ந்தது. அவர்களில் அநேகர், இவன் பிசாசு பிடித்தவன் பயித்தியக்காரன், ஏன் இவனுக்கு செவி கொடுக்கிறீர்கள் என்றார்கள்.

பூமி அதிர்ந்தது மற்றும் மலைகள் பிளவுப்பட்டன. மரித்த அநேக சகோதரர்கள் எழுந்தார்கள். (இயேசு உயிர்த்தெழுந்தபிறகு அவர்கள் பட்டணங்கள் பிரவேசித்து அநேக பேருக்கு தென்பட்டார்கள்). ரோம ராணுவ வீரர்கள் கூட நடந்தவைகளைப் பற்றி ஏதோ நிகழ்கின்றன. பிலாந்து அவர் சிலுவையில் தொங்கப்படவும் கட்டளையிட்டார். இவர் உண்மையாகவே தேவனுடைய குமாரன் இந்த விஷயத்தின் வாயிலாக அவரை

யூதர்கள் சிலுவையில் அறைந்தார்கள். ஆனால், இந்த சம்பவம் மறைக்கப்பட்டால், அநேகபேர் இப்பொழுது தெரிந்துக் கொண்டார்கள். மற்றும் அவரை மறுதளித்து, சிலுவையில் அறைந்த மத நாயகர்கள் அவரை பிரதேகமாக இவர் தேவனுடைய குமாரன் என்று இப்பொழுது தெரிந்து கொண்டார்கள். ஆனால், இந்த சம்பவங்களை அவர்கள் எப்படி விவரிப்பார்கள்? அவர்கள் அவரை நம்புவதற்கு பிரியப்படுவதில்லை அதனால் அந்த விஷயத்தை விவரிக்கவில்லை.

ஆயினும் சாத்தான், இயேசுவை சமாதியில் அடக்க முடியவில்லை அதினால் தேவன் அவரை மூன்றாம் நாளில் உயிர்த்தெழச் செய்தார். இருந்தாலும் பூலோகத்தில் இயேசுவுடைய ஊழியம் பூர்ணமாக்கப்படவில்லை. அவர் சிநேகிதர்களுக்கு இன்னும் அநேக அடையாளங்கள் காண்பித்தார்.

நிரூபிக்கிறதற்காக அவர் அநேகப் பேருக்கு தென்பட்டார் மற்றும் தெரிந்துக் கொண்ட சீஷர்களாகிய அந்த சாட்சிகளுக்கு கடைசியாகக் காணப்பட்டு அடையாளங்களைக் கொடுத்தார். அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்கள் நோக்கி, வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள் இதோ, உலகத்தின் முடிவு பரிபந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென். மத்தேயு 28 : 18-20.

அப்போஸ்தலர் நடபடிகள் 2 : 37 பேதுரு சொன்னதுபோல இதை அவர்கள் கேட்டபொழுது, இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகிய, பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்றார்கள். அப்படி என்றால் அந்த நாளில் அவர்களுக்கு வாய்ப்பு கொடுத்துப்போல இந்த நாட்களில் நமக்குகூட தேவன் வாய்ப்பைக் கொடுத்திருக்கிறார் போதுருவோடேகூட அவர்கள் எப்படி நடந்துக் கொள்வதற்கு நீயும் ஆலோசனை செய். அவர் பரலோகத்திற்கு சென்ற பத்து நாட்களுக்குப் பிறகு, பெந்தகொஸ்தே என்னும் பண்டிகை நாள் அப்போஸ்தலர் 2-ஆம் அதிகாரத்தில் எழுதியிருக்கிறபடி இயேசு ஒரு சபையை தொடங்கினார் அந்த சபை கிறிஸ்து தன்னுடைய சொந்த இரத்தித்தினாலே சம்பாதித்த தன்னுடைய சபை - அப் 20:28, அந்த சபைக்கு அவர் தலை, கொலேசெயர் 1:18. அந்த சபை அவருடைய சரீரம், சம்பூர்ணமாக நிரப்பப்படுகிற அவரைச் சம்பூர்ணமாய் இருக்கின்றது. எபேசியர் 1: 23.

## கேள்விகள் :

1. கிறிஸ்து தன்னுடைய பாவமில்லாத தன்னுடைய சரீரத்தை மனுபுத்திரர் பாவங்களுக்காக பரிபூர்ண பலியாக அற்பித்துக்கொண்டார்.

   ............ஆம் ........... இல்லை

2. இரட்சிப்பு பெற்ற அவர்கள் என்றால் கிறிஸ்து சரீரத்துக்குள் சேர்க்கப்பட்டவர்கள். ஜீவனுள்ள தேவனுடைய சபையாக தேவனுடைய சித்தத்ததை நடத்துவார்கள். ஒரு உலக குழு அல்ல

   ............ஆம் ........... இல்லை

3. இயேசுவானவர் தொடங்கின சபை என்றால், உலகத்திலுள்ள பாவத்திலிருந்து, அவருடைய வார்த்தைக்கு

கீழ்ப்படிந்து வந்த ஒரு சமூகம் (சபை)

............ஆம் ........... இல்லை

4. கிறிஸ்துவுடைய சபைக்கு அஸ்திபாரம் யார்?

............. அப்போஸ்தலர்கள்
............. தேவனுடைய ஆலயம் மற்றும் ஜெப ஆலயம்
............ தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து.

5. கிறிஸ்து சரீரம் என்றால் கிறிஸ்து சபைக்குள் ஜனங்கள் எப்படி சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்?

................. வாரிசு மூலமாக
............... அங்கத்தினர்கள் சத்தியம் வைத்ததினால்
.............. தேவன் மூலமாக

## வேதாகமத்திலுள்ள நபர்களுடைய முடிவுகள்

## பாடம் – 17

நாம் ஒவ்வொரு நாளும் சில தீர்மானம் எடுத்து வருகிறோம். அவைகளில் மறுபடியும் தினமும் நடக்கிறவைகள், அவைகளிலே உண்ணுவது, உடுத்திக்கொள்வது, நடக்கிறது மற்றும் பேசுவது சொல்லப்பட்டவைகள் சில, மனிதனுடைய இப்படிப்பட்ட தீர்மானங்களிலே சில நேரங்களில் நினைத்துக்கூட பார்க்க முடியாத அளவுக்கு சந்தோஷம், ஆனந்தம் பெறலாம் மற்றும் பிறருக்கு இவைகள் மூலம் சோர்ந்து போவது மற்றும் தலைவலிகள் கூட ஏற்படும். சில நேரங்களில் நம்முடைய குடும்ப பந்தங்கள். நிலை நிறுத்துவதற்காக சில பெரிய முடிவுகள் தெரிந்துக் கொள்வோம். அவைகள் மதசார்ந்தப்பட்டவைகளாகவும் அல்லது அவர்களுடைய வேலைகளோடும் கூட சேர்ந்து பிழைப்புக்கும், இறப்புக்கும் மதியில் நம்முடைய ஜீவ வாழ்க்கையை நிறுத்துவதற்காக சம்பந்தப்பட்டு இருக்கும். சில சீர்கேடான முடிவுகள் மற்றும் சிலர் நல்ல முடிவுகள் எடுப்பார்கள் என்று நாம் அனைவருக்கும் தெரியும் அது நல்லதாக இருந்தாலும் கேட்டவைகளாக இருந்தாலும் முடிவுகளுடைய பின்விளைவுகள் இருக்கும். வேதாகமத்தில் சிலர் எடுத்த அப்படிப்பட்ட முடிவுகளிலிருந்து சிலவற்றை உதாரணமாக பார்க்கலாம்.

முடிவுகள்

சாப்பிடகூடாது என்று சொல்லப்பட்ட கனியை ஆதமும், ஏவாளும் சாப்பிட்டார்கள்.

ஏற்றுக் கொள்ளப்படாத பலியை காயின் பலிக்கொடுத்தார்.

காயின் தன்னுடைய தம்பியை கொன்றான்.

ஆபிரகாம் தன்னுடைய குமாரனை பலியிடுவது.

மோசே–தேவனை பின்பற்றினன்

தேவனுடைய பணியில் உபயோகப்பட்டாள் மரியாள் அதற்கு இஷ்டப்பட்டு கீழ்ப்படிந்தாள்.

காசுக்காக யூதா இயேசுவை பின்பற்றினான்.

பவுள் மனம்திரும்பி, கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார்.

## நோவா பேழையைக் கட்டினார்

அவைகளுடைய விளைவுகள்

மரணம், ஏதேனிலிருந்து வெளிலே துரத்தப்படுவது மற்றும் துக்கம் ஏற்படுவது.

தேவன் அவனை ஏற்றுக்கொள்ளவில்லை.

முத்திரை போடப்பட்டு பூமியில் நிலையற்று அலைகிறவனாயிருந்தான்.

நீதிமானாய் என்னப்பட்டார் மனிதர்களை காப்பாற்றியவர்.

வாக்குத்தத்தத்தைப் பெற்றார்.

ஒருமிக பெரிதான ஜனக்கூட்டத்திற்கு தலைவனானான்.

நமக்காக பலியான இயேசுவுக்கு பிறக்க செய்தாள்.

தற்கொலை செய்துக் கொண்டான்.

அந்நிய ஜனங்களுக்கு அப்போஸ்தலனானார்.

அவரை சந்தோஷப்படுத்துவதற்கு மற்றும் அவருக்கு கீழ்ப்படிவது புரிந்துக் கொண்டு தேவனுடைய ஜனங்களிலே வளர்வதற்கு சம்பந்தப்பட்ட அநேக சமையங்களில் வாய்ப்புக் கிடைக்கும் போது நாம் ஒவ்வொரு நாளும் சம்பந்தப்பட்டிருக்கின்றோம். கீழே கொடுக்கப்பட்ட காரியங்களை கவனியுங்கள்.

நம்முடைய வியாபாரங்களில், குடும்ப மற்றும் ஆவிக்கூரிய வாழ்க்கையில் நாம் உண்மையுள்ளவர்களாக இருக்க முடியுமா? இருக்கின்றோமா?

நமக்கு நாம், குடும்ப துணைவரோடே மற்றும் பிள்ளைகளுக்கு நம்பிக்கையாக இருக்கின்றோமா? இருக்க முடியுமா?

நம்முடைய மனதை. கண்களை மற்றும் நாவுகளை காத்துக் கொள்கிறோமா? இருந்துக் கொண்டிருக்கிறோமா?

நாம் கீழ்ப்படிந்து தேவனுடைய கட்டளைகளுக்கு ஏற்றபடி கீழ்ப்படிந்து தேவனுடன் ஒப்புரவாகின்றோமா? இல்லையா?

நம்முடைய முடிவுகள் மூலம் எதிர் வருகின்ற விளைவுகள் நல்லதோ கேட்டதோ எதிர்நோக்குகின்றோம். மனிதர்களுடைய யோசனைகள் விரோதமாக இருந்தால் அவர்களுடைய விளைவுகள்கூட தேவனுக்கு விரோதமாக இருக்கும். மனிதர்களுடைய கற்பனைகளை உபதேசங்களாக போதித்து, இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து தங்கள் உதடுகளினால் என்னைக் கனம் பண்ணுகிறார்கள். அவர்கள் இருதயமோ எனக்கு தூரமாய் விலகியிருக்கிறது. மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனைச் செய்கிறார்கள். (மத்தேயு 15 : 6-9) படியுங்கள்.

### கேள்விகள் :

1. நம்முடைய வாழ்க்கையிலே ஒவ்வொரு முடிவுகளும் ஒரு பெரிய முடிவுதான்

................ஆம் ........... இல்லை

2. தொடர்ந்து நம்முடைய முடிவுகள் அவர்களுடைய விளைவுகள் நம்முடைய வாழ்வுகளை சந்திக்கும்.

3. கீழ்ப்படிதலாய் ஏற்றுக்கொண்ட நிகழ்வுகளையும் விளைவுகளையும், துயரத்துடனும், துக்கத்துடனும் மற்றும் கீழ்ப்படிதலாய் ஏற்றுக்கொண்ட வாய்ப்புக்களிலே அது அவர்களுக்கு சந்தோஷம் ஆனந்தமம், கொடுக்கும் என்று வேதாகமம் தெரியப்படுத்துகின்றன.

................ஆம் ........... இல்லை

4. ஆதாம், - ஏவால் எடுத்து முடிவுகள் மூலம் என்ன நடந்தது.

.............. துக்கம், மற்றும் மரணம்
............... நல்ல வளர்ச்சியடைந்தார்கள்.

5. பவுலுடைய முடிவுகள், விளைவுகள்

................. அந்நிய ஜனங்களுக்கு அப்போஸ்தலானார்
................ யூதா மத தலைவனானார்
................ யூதர்களுடைய பள்ளிகளிலே ரபியாக ஆனார்.

## இயேசுவை தேவனுடைய குமாரனாக விசுவாசிப்பது

## பாடம் - 18

மனந்திரும்புதலை உபதேசித்த இயேசு கூட இப்படி உபதேசித்தார். உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான், இதை விசுவாசிக்கிறாயா என்றார் (யோவான் 11 : 26).

காலம் நிறைவேறிற்று தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று மனந்திரும்பி சுவிசேஷத்தை விசுவாசியுங்கள் என்றார். (மாற்கு 1 : 15)

அப்பொழுது இயேசு சத்தமிட்டு என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் என்னிடத்தில் அல்ல, என்னை அனுப்பினவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறான். என்னைக் காண்கிறவன் என்னை அனுப்பினவரைக் காண்கிறான், என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனெவனும் இருளில் இராதபடிக்கு, நான் உலகத்தில் ஒளியாக வந்தேன். ஒருவன் என் வார்த்தைகளைக் கேட்கும் விசுவாசியாமறபோனால், அவனை நான் நியாயந்தீர்ப்பதில்லை, நான் உலகத்தை நியாயந்தீர்க்கவராமல், உலகத்தை இரட்சிக்கவந்தேன். என்னை தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவளை நியாயந்தீர்க்கிற கொன்றிருக்கிறது. நான் சொன்ன வசனமே அவனை கடைசி நாளில் நியாயந்தீர்க்கும். நான் சுயமாய்ப் பேசவில்லை நான் பேச வேண்டியது இன்னதென்றும் உபதேசிக்க வேண்டியது இன்னதென்றும் என்னை அனுப்பின பிதாவே எனக்கு கட்டளையிட்டார். அவருடைய கட்டளை நித்திய ஜீவனாயிருக்கிறதென்று அறிவேன் ஆகையால் நான் பேசுகிறவைகளைப் பிதா எனக்குச் சொன்னபடியே பேசுகிறேன் என்றார். (யோவான் 12 : 44-50)

தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புக்கூர்ந்தார். (யோவான் 3 : 16).

அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்கள் நோக்கி வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள் இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென் (மத்தேயு 28 : 18-20).

நாம் தேவனுடைய ரூபத்திலே சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றோம். முடிவுகள் எடுப்பதற்கு மற்றும் வேலை செய்வதற்கு வாய்ப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. தீர்க்க தரிசனங்கள் மற்றும் அவைகளுடைய நிறைவேறுதல் கூட நாம் பார்த்தோம். மனிதர்களை தேவனிடம் சமாதானப்படுத்துவதற்கு தேவன் ஒரு வழியையும், ஒரு கட்டுப்பாடும் மற்றும் ஒரு திட்டத்தை ஏற்படுத்தினதையும் பார்த்தோம், பக்தியற்ற மற்றும் பாவத்திலிருந்து திரும்புவது, இயேசு மனந்திரும்புதலை பற்றி உபதேசித்தார். அவர் நமக்கு அன்பையும், நல்லொழுக்கத்தையும் மற்றும் உண்மையையும் உபதேசம் பண்ணினார். பூலோகத்திற்கு இறங்கி வந்த மேசியா என்றால் கிறிஸ்து அவரை விசுவாசிக்கிறதற்கு நம்பிக்கையை உபதேசித்தார். அவரே நம்முடைய பாவங்களுக்கு பரிபூர்ண பலியானவர். அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து அவரிடத்தில் நம்முடைய நம்பிக்கையைத் தெரியப்படுத்தும்.

அவருடைய உபதேசம் அதிகாரமுள்ளதாய் இருக்கிறது. உண்மையாக, அவர் உயிர்த்தெழுந்தபிறகு சகல அதிகாரம் கொடுக்கப்பட்டது. பார்த்தவர்களைவிட அல்லது கேட்டவர்களைவிட அவருடைய உபதேசம் வித்தியாசமுள்ளதாய் இருந்தன. பிற மனிதர்களுக்கும் உடன் இருந்த மனிதர்களுக்கும் மாற்றத்தைக் கொண்டு வந்தன. மனந்திரும்புதல் மாற்றத்தைக் கேட்கின்றது. வாழ்க்கையில் பாணியில் ஒரு மாற்றத்தைக் கொண்டுவர தேவனுடைய அ ன்பு அவருடைய செய்தி.

நாம் அவருடைய கட்டளைகளை கைக்கொள்வதே அவரிடத்தில் அன்பு கூருவதாம், அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல (1. யோவான் 5 : 3)

நாம் அவருடைய கற்பனைகளின்படி நடப்பதே அன்பு : நீங்கள் ஆதிமுதல் கேட்டிருக்கிறபடி நடந்து கொள்ள வேண்டிய கற்பனை இதுவே. (2 யோவான் 1 : 6).

தேவனால் அனுப்பப்பட்டவர் தேவனுடைய வார்த்தைகளைப் பேசுகிறார். (யோவான் 3 : 34)

ஆதிமுதல் இருந்ததும், நாங்கள் கேட்டதும், எங்கள் கண்களினால் கண்டதும், நாங்கள் நோக்கிப் பார்த்ததும், எங்கள் கைகளினாலே தொட்டதுமாயிருக்கிற ஜீவவார்த்தையைக் குறித்து உங்களுக்கு அறிவிக்கிறோம். அந்த ஜீவன் வெளிப்பட்டது. பிதாவினிடத்திலிருந்ததும், எங்களுக்கு வெளிப்பட்டதுமான நித்தியமாயிருக்கிற அந்த ஜீவனை நாங்கள் கண்டு, அதைக் குறித்துச் சாட்சி கொடுத்து அதை உங்களுக்கு அறிவிக்கிறோம். (1 யோவான் 1 : 1-2)

## கேள்விகள் :

1. இயேசுவுக்கு சர்வ அதிகாரம் இருக்கின்றது?

.............ஆம் ........ இல்லை

2. ஒரு நபர் இயேசுவிடம் விசுவாசம் வைக்கலாம், ஆனால் இயேசு பிரியப்பட்டவைகளை செய்வதற்கு தேவையில்லை. கீழ்ப்படியத் தேவையில்லை.

...............ஆம் .........இல்லை

3. இயேசு இப்படி உபதேசித்தார்.

................ என் மேல் விசுவாசம் மட்டும் வை
............. விசுவாசம் வைத்து, வாழ்க்கையை மாற்றிக் கொண்டு மனந்திரும்புங்கள்.
............... சீஷர்களாக்கி மற்றும் ஞானஸ்நானம் கொடுப்பது
............. 1 (அ) 2 ...............

4. இவைகள் ஒரு மாற்றத்தை நம்முடைய செயல்களில் இயேசுவானவர் விரும்புகின்றார்.

................... சொந்த விஷயங்களை
................... பிறரைப்பற்றி
...................தேவன்
...................மேலே கொடுக்கப்பட்டவைகள் எல்லாம்.

5. இயேசுவைப்பற்றிய சாட்சிகள் கொடுத்துவந்து யோவான் என்ன சொன்னார்?

.............. அவரை நான் பார்த்தேன்.
................... அவர் சொன்ன வார்த்தைகளை கேட்டார்கள்.
....................அவரை தொட்டுப் பார்த்தார்கள்.
...................மேலே கொடுக்கப்பட்டவைகள் எல்லாம்.

## கீழ்ப்படிதல் – அன்புக்கு ஆதாரம்

## பாடம் – 19

தேவனிடத்தில் விசுவாசம் வைத்தபோல இயேசுவின் அன்பு, விசுவாசத்தைப் பற்றியச் செய்தியை உபதேசம் பண்ணினார். உலகத்திலுள்ள வழிகள் மற்றும் பாவங்களிலிருந்து நம்முடைய பாணியை மாற்றி, பிதா, குமாரன், மற்றும் பரிசுத்த ஆவியின்மூலம் சமாதானப்படுவதற்கு அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படியவேண்டும்.

அன்பு மூலம் வந்த கீழ்ப்படிதல் அதனோடு கூட ஏற்பாடு மூலம் வந்தது அல்ல. மற்றும் நல்ல உபகாரம்மூலம் அல்ல. கீழ்ப்படிதல் உன் மேல் வல்லமையாகவும் பலவந்தமாகவும் அல்ல. மற்றும் ஒரு உதவியால் வந்தது அல்ல, கேட்டதும், ரூபமாகவும், அல்லது தேவையில்லாமல் அன்பு வெளிப்படுத்தப்படும். கீழ்ப்படிதலுக்கேற்ற அன்பு தன்மையாக வரும் ஒரு கிரியை, எதற்கு என்றால் நீ அன்புக் காட்டுகிறவர்கள் கேட்கப்படுகிறது மற்றும் நீ சந்தோஷப்பட வைக்கவேண்டும்.

இப்படிப்பட்ட கீழ்ப்படிதல் பற்றி அநேக உதாரணங்கள் முன்னே பாடங்களிலே கவனித்தோம் அவைகளிலே சில

- சீரான கணக்கெடுப்பில் பேழையை தயார்செய்த நோவா வேலைச் செய்தான்.
- வெள்ளம் வந்தபிறகு, காய்ந்த நிலத்தின்மேல் மறுபடியும் அடி எடுத்து வைத்தபோது நோவா ஒரு பலிபீடத்தைக் கட்டி, கலியைச் செலுத்தினார். தேவன் மேல் இருந்த அன்பிலே இதைச் செய்தார்.
- ஆபிரகாம் தன்னுடைய மந்தைகளில் ஆண் ஜாதிகள் எல்லாவற்றுக்கும் விருத்தசேதனம் பண்ணினான்.
- மனிதர்களாக ஆலோசனைப் பண்ணினாள் அதற்குக் காரணம் எதும் இல்லை, இருந்தாலும், தேவன் அதைச் செய்யச் சொன்னார்.
- தன்னுடைய ஒரே குமாரனை அதுவும் வாக்குத்தத்த குமாரனை மலைமேல் கொண்டுச் சென்று அவனை பலி செலுத்துவதற்கு பலிபீடத்தைக் கட்டினார் மனிதர்களுடைய ஆலோசனைகளிலே ஒரு கொலை அதனால் ஒரு சாதாரண மனிதர் இப்படிப்பட்ட வேலையை செய்யமாட்டார். இருந்தாலும் தேவனிடத்தில் அபிரகாமுக்கு ஏற்பட்ட பரிபூரண விசுவாசத்தின் மூலம் இதைச் செய்தார்.

பார்வோன் மற்றும் அவருடைய சேனை துரத்திக் கொண்டிருக்கும்போது இஸ்ரவேலர்கள் சிவந்த சமுத்தினிடையில் வந்தபோது பயந்தார்கள். இஸ்ரவேலர்கள் சமுத்திரத்தைக் கடப்பதற்கு இங்கே ஏதோ ஒரு மாய தந்திரம் நடக்கும் என்று யாராகிலும் நினைத்தார்களா? இருப்பினும் மோசே தன்னுடைய விசுவாசம் மற்றும் தான் தேவன்மேல் வைத்த அன்பும் தனக்கு அவர்மேல் நம்பிக்கை மூலம் கீழ்படிந்தார். ஆதலால் அவர்கள் கடந்துச் செல்வதற்கு சமுத்திரம் வழிவகைத்தது.

இயேசுவானவர் செய்த அற்புத காரியங்கள் எல்லாம் மற்றும் அவருடைய மூன்று வருட உபதேசம் எல்லாம்

அவர் தேவனுடைய குமாரன் என்று உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றன.

கடைசி காலங்களில் அவர் எருசலேம் பக்கம் முகத்தை திருப்பினார். யூதர்கள், ரோமர் சேனைகள் உதவியின் மூலம் அவரைக் கொள்வார்கள் என்று அறிந்தும் அங்கே செல்வதற்கு முடிவெடுத்தார்.

அவர் தன்னுடைய விருப்பத்தின்படி தன்னுடைய உயிரைக்கொடுப்பதற்கு எருசலேமுக்குச் சென்றார். இது நிமித்தம் அவர் பரலோகத்திலிருந்து பூலோகத்திற்கு வந்தார். தன் முன்னே இருக்கின்ற சிலுவை மரணம் பற்றி தன்னுடைய பரிபூரண கீழ்ப்படிதல் வாயிலாக, அவர் செய்த ஜெபத்தில் காண முடியும் (மத்தேயு 26 : 42)

கர்த்தராகிய இயேசு, தன்னுடைய பிதாவாகிய தேவனை அன்புக் கூர்ந்தார் ஆதலால் அவருக்கு கீழ்ப்படிந்து பிதாவினுடைய சித்தத்தை நிறைவேற்றினார். அதுபோல அப்போஸ்தலர்களும் கர்த்தரை அன்பு கூர்ந்தார்கள். அதினால் அவருடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படிந்தார்கள். ஆதலால் நாமும் கூட உண்மையாக தேவனை அன்புக் கூர்கிறவர்களாக இருநதால் அவருடைய வசனங்களிலே வாசிக்கப்பட்ட செய்திகளுக்கு கீழ்ப்படிய வேண்டும். அவரை அன்புக்கூர்ந்து வசனங்களுக்கு கீழ்ப்படியாமல் போனால் நாம் சத்தியத்தை பின்பற்ற முடியாது.

அதனால் நாம் தேவனுடன் சமாதானப்படுவதற்கு கீழ்ப்படிய வேண்டிய கட்டாயம் வரும்போது, அவருக்குள் எந்தக் காரணம் இல்லை என்றாலும் அவரை அன்புக்கூறுகின்றோம். அதனால் அவருக்கு கீழ்ப்படிய வேண்டும். இயேசுவைப்போல உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறது போல – என்று சொன்னதுபோல நாமும் கீழ்ப்படிய வேண்டும்.

**கேள்விகள் :**

1. நாம் ஒருவரிடத்தில் அன்பு வைத்திருக்கிறபடியே அவர்கள் பிரியப்பட்டவைகள் செய்வது எதற்கு என்றால்,

   ............... இதுவே நல்லவேலை என்று நினைக்கின்றோம்.
   ........... எல்லா வேலைகளிலும் இது நல்லது என்று நினைத்துக் கொள்வோம்.
   ............ நாம் அன்புக் கூறுகிறவர்களை இது சந்தோஷப்படுத்துகின்றது.

2. குடும்ப அழுத்தம், அரசாங் உதவிகள் பயங்கள் அல்லது பரிசுகள் மூலம் அன்பைப் பெறலாம்.

   .................ஆம் ............ இல்லை

3. அவரைப் பிடிப்பார்கள் என்று அறிந்தும் பஸ்காவை நடப்பிக்கவேண்டும் என்று இயேசு எருசலேமுக்குச் சென்றார்.

   .................ஆம் ............ இல்லை

4. இரட்சிப்பைப் பற்றி இயேசுவுடைய உபதேசத்திற்கு நம்முடைய முறமை எப்படி இருக்கின்றது, நாம்

நினைத்தபடி இருக்கவேண்டுமா?

.................ஆம் ............ இல்லை

5. இயேசுவுடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படியாமற்போனாலும் ஒவ்வொருவனும் தேவனிடம் சமாதானப்பட முடியும். எதற்கு என்றால் மனிதர்கள் எல்லாருக்காவும் இயேசு மரித்தார்.

.................ஆம் ............ இல்லை

## கிறிஸ்து நிறுவப்பட்ட சபையிலே ஜனங்கள் சேர்க்கப்பட்டார்கள்

## பாடம் –20

### முதல் அங்கத்தினர்கள்

இயேசு தன்னுடைய பிதாவோடேகூட இருப்பதற்கு மறுபடியும் பரலோகத்திற்கு சென்றார். முன்னதாக எழுதியிருக்கிறபடி கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது. அன்றியும் மனந்திரும்புதலும் பாவ மன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது. நீங்கள் இவைகளுக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள். என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன், நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார். (லூக்கா 24 : 46 – 49)

அப்பொழுது அவர்கள் எருசலேமுக்குச் சமீபமாய் ஒரு ஓய்வுநாள் பிரயாண துரைத்திலிருக்கிற ஒலிவமலை என்னப்பட்ட மலையிலிருந்து எருசலேமுக்குத் திரும்பிப் போனார்கள். (அப்போ 1 : 12)

இயேசு எருசலேமுக்கு சென்ற பத்து நாட்களுக்கு பிறகு எருசலேமில் 120 பேர் மேடையின் மேல் கூடி இருந்தார்கள். பரிசுத்த ஆவயானவர் அவர்கள் மேல் இறங்கி வந்தவுடன் அவர்கள் அறியாத அந்நிய பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள். அந்த இடத்திற்கு ஜனங்கள் கூட்டமாக கூடி வந்தார்கள்.

அப்போஸ்தலர்கள் சிலுவையில் அறையப்பட்ட மேசியாவை பற்றி சொல்லி மனந்திரும்புதலைப் பற்றி மற்றும் பாவ மன்னிப்பைப்பற்றி உபதேசித்தார்கள்.

## பெந்தெகொஸ்தே என்னும் நாள்

யூதர்களுடைய கேள்விக்கு பேதுரு இப்படி பதில் அளித்தார். பேதுரு, அவர்களை நோக்கி, நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது என்று சொல்லி, இன்றும் அநேக வார்த்தைகளாலும் சாட்சி கூறி, மாறபாடுள்ள இந்தச் சந்ததியை விட்டு விலகி உங்களை இரட்சித்துக் கொள்ளுங்கள். என்றும் புத்தி

சொன்னான். அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள் அன்றைய தினம் ஏறக்குறைய மூவாயிரம்பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். அப்போஸ்தலர் 2 ; 38, 40, 41

## சமாரியர்கள் மற்றும் சீமோன்

ஆகையால் பிலிப்பு தேவனுடைய ராஜ்ஜியத்தைப் பற்றியும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தைப் பற்றியும் பிரசங்கித்துக் கொண்டிருக்கும்போது அவர்கள் அவரை நம்பி புருஷர்களும் ஸ்திரீகளும் ஞானஸ்நானம் பெற்றார்கள் அப்பொழுது சீமோனும் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்று, பிலிப்பைப் பற்றிக்கொண்டு, அவனால் நடந்த அடையாளங்களையும் கண்டு பிரமித்தான். (அப். 8 : 12-13, 18, 20-22)

## எத்தியோப்பியனாகிய மந்திரி

அப்பொழுது எத்தியோப்பியருடைய ராஜஸ்திரீயாகிய கந்தாகே என்பவளுக்கு மந்திரியும் அவனுடைய பொக்கிஷங்களுக்கு அதிகாரியுமாகிய ஒருவனுக்கு பிலிப்பு. சுவிசேஷத்தை கேட்டு, கர்த்தருக்குள் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டான. அதற்கு பிலிப்பு வாயைத்திறந்து, அந்த வசனங்களை விவரித்து இயேசுவைப் பற்றிய சுவிசேஷத்தை பிரசங்கித்தாள். அவர்கள் வழியில் சென்றுக் கொண்டிருக்கும்போது தண்ணீர் இருக்கின்ற இடத்திற்கு வந்தபோது அப்பொழுது அதிகாரி இதோ தண்ணீர் எனக்கு ஞானஸ்நானங் கொடுப்பதற்கு தடை என்ன என்று கேட்டான் இரதத்தை நிறுத்தும்படிக் கட்டளையிட்டான் பிலிப்பும் அதிகாரியும் இருவரும் தண்ணீருக்குள் சென்றார்கள் அப்பொழுது பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான். (அப் 8 : 30, 31, 35-38).

## தர்சுவனாகிய பவுல்

அவன்-கர்த்தர், இதோ நான் இருக்கின்றேன். அதற்கு கர்த்தர் நீ எழுந்து நேராக இருக்கிற வழியில் சென்று, யூதா என்னும் அவனுடைய வீட்டில் தர்சுவனாகிய பவுளுக்காக விசாரனை செய், இதோ அவன் ஜெபம் பண்ணிக்கொண்டு இருக்கிறான் அவன் அன்னியா என்னும் ஒரு மனிதர் உள்ளே வந்து, தான் பார்வையடைவதற்கு தலைமேலே கரங்களை வைத்து பார்த்துக்கொண்டு இருக்கிறார் என்று சொன்னார் அன்னிய சென்று அந்த வீட்டில் பிரவேசித்து அவர் மேல் கை வைத்து பவுளே, சகோதரனே, நீ வந்து வழியில் உனக்கு காணப்பட்ட கர்த்தராகிய இயேசு, நீ பார்வையடைந்து, பரிசுத்த ஆவியின்மூலம் நிரப்பப்பட வேண்டுமென்று....... இப்பொழுதே அவருடைய கண்களிலிருந்து சேதிள்கள் விழுந்தன பார்வையடைந்து, எழுந்து ஞானஸ்நானம் பெற்றார். பிறகு ஆகாரத்தை சாப்பிட்டான் பெலனடைந்தான் பிறகு அவர் தமஸ்குவிலுள்ள சீஷர்களோடகூட சில தினங்கள் இருந்தான். உடனே ஜெப ஆலயத்தில் பிரவேசித்து இயேசுவே தேவனுடைய குமாரநேற்று உபதேசம் பண்ணிக் கொண்டு வந்தான், அப்.9:11-12, 17-20 படியுங்கள்.

## கொர் நேவியு

அதற்கு பேதுரு நம்மைப் போல் பரிசுத்த ஆவியைப் பேற்ற இவர்கள் ஞானஸ்நானம் பெறாமல் யாராகிலும் இவர்களுக்கு தடை செய்யாமல் என்று சொல்லி இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் அவர்கள்

ஞானஸ்நானம் பெற வேண்டுமென்று கட்டளையிட்டார் பிறகு சில நாட்கள் என்னுடைய இருக்க வேண்டும் என்று சொல்லி அவர்கள் அவரை வேண்டிக் கொண்டார்கள். (அப். 10 : 44-48)

### லீதியாள் :

அப்பொழுது வீதியாள் என்னும் தேவ பக்தியுள்ள ஸ்திதி பவுல் சொல்லியவைகளைக் கவனித்துக் கொண்டிருந்தாள். அவளுடைய ஊர் தியத்தீரா பட்டணத்தைச் சார்ந்தவள். கர்த்தர் அவருடைய இருயத்தைத் திறந்தார் அதினால் பவுல் சொன்ன வார்த்தைகளில் கவனிப்போடு கேட்டுக் கொண்டிருந்தாள். அவளும் அவளுடைய வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்றபோது, அவள் நான் கர்த்தரில் விசுவாசம் வைத்திருக்கிறேன் என்று நீங்கள் எண்ணினால், என் வீட்டுக்கு வர வேண்டும் என்று வேண்டிக் கொண்டாள் எங்களை பலவந்தப் பண்ணினாள். (அப். 16 : 14-15)

### பிலிப்புவினுள்ள சிறைச்சாலைக்காரன்

அப்பொழுது அவன் தீபங்களைக் கொண்டுவரச் சொல்லி, உள்ளே ஓடி, நடு நடுங்கி, பவுலுக்கும் சீலாவுக்கும் முன்பாக விழுந்து அவர்களை வெளியே அழைத்து வந்து, ஆண்டவமாரே, இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்யவேண்டும் என்றான் அதற்கு அவர்கள். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் என்று சொல்லி, அவனுக்கும் வீட்டிலிருந்து யாவருக்கும் கர்த்தருடைய வசனத்தைப் போதித்தார்கள். மேலும் இராத்திரியிலும் அந்நேரத்திலேதானே அவன் அவர்களை அழைத்துக்கொண்டுபோய், அவர்களுடைய காயங்களைக் கழுவினான். அவனும் அவனுடையவர்களும் உடனே ஞானஸ்நானம் பெற்றார்கள். (அப். 16 - 29-38)

### ஜெய ஆலயத்தலைவனாகிய கிறிஸ்பு

ஜெப ஆலயத்தலைவனாகிய கிறிஸ்பு என்பவர் தன் வீட்டார் அனைவரோடும் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவனானான். கொரிந்தியரில் அநேகரும் சுவிசேஷத்தைக் கேட்டு, விசுவாசித்து, ஞானஸ்நானம் பெற்றார்கள் (அப். 18 : 8)

### யோவானுடைய சீஷர்கள்

அப்பொல்லோ என்பவன் கொரிந்து பட்டணத்திலே இருக்கையில் பவுல் கேடான தேசங்கள் வழியாய்ப் போய், எபேசுவுக்கு வந்தான். அங்கே சில சீஷரைக் கண்டு, நீங்கள் விசுவாசிகளானபோது, பரிசுத்த ஆவியைப் பெற்றீர்களா என்ற கேட்டான். அதற்கு அவர்கள், பரிசுத்த ஆவி உண்டென்பதை நாங்கள் கேள்விப்படவே இல்லை என்றார்கள் அப்பொழுது அவன், அப்படியானால் நீங்கள் எந்த ஞானஸ்நானம் பெற்றீர்கள் என்றான். அதற்கு அவர்கள் யோவான் கொடுத்த ஞானஸ்நானம் பெற்றோம் என்றார்கள் அப்பொழுது பவுல் லோவான் தனக்குப்பின் வருகிறவராகிய கிறிஸ்து இயேசுவில் விசுவாசிகளாயிருக்க வேண்டும் என்று ஜனங்களுக்குச் சொல்லி மனந்திரும்புதலுக்கு ஏற்ற ஞானஸ்நானத்தைக் கொடுத்தானே என்றான் இதை கேட்டபோது அவர்கள் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றோர்கள். (அப். 19 : 1-5)

பவுல் ரோமாவிலுள்ள கிறிஸ்துவர்களுக்கு எழுதினார். மற்றும் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்த எல்லாரும், கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக

ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும் படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம். ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலில் இணைக்கப்பட்டிருப்போம். நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ் செய்யாதப்படிக்கு, பாவ சரீரம் ஒழிந்து போகும் பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடே கூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம். (ரோமர் 6 : 1-6)

**கேள்விகள் :**

1. பெந்தகொஸ்தே என்னும் நான் பரிசுத்த ஆவியை அவர் அவர்கள்மேல் அமர்ந்தபோது மூன்றாயிரம் பேர் ஞானஸ்நானம் பெற்று இரட்சிப்பும் பெற்றார்கள்.

   ..................ஆம் ............. இல்லை

2. மனம் திரும்பி ஞானஸ்நானம் பெற வேண்டும் என்றும் பெந்தெகொஸ்தே என்னும் நாளில் உபதேசித்தான்.

   .............. அற்புதங்கள் செய்யும் வல்லமைக்காக
   ............... பாவ மன்னிப்பு பெறுவதற்கு

3. பரிசுத்த ஆவியானவர் நேராக அவர்கள் மேல் அமர்ந்ததினாலே தாசுவனாகிய பவுள் அப்போஸ்தலனாக மாறினார்.

   ..................ஆம் ............. இல்லை

4. பிலிப்பு எத்திலோப்பியா மார்க்கத்திலே சென்றபோது தண்ணீரை ஒரு பாத்திரத்தில் எடுத்துக் கொண்டு அதிகாரிக்கு தலைமீது வாற்றி அவருக்கு ஞானஸ்நானம் கொடுத்தான்.

   ..................ஆம் ............. இல்லை

5. கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றுவர்களை பற்றி ரோமா நிரூபத்தில் பவுல் இப்படி சொன்னார்.

   ........... மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம்
   ........... அவர்களுடைய உயிர்த்தெழுதலின் சாயலில்
   ......... புதிதான ஜீவன் பெற்றுக் கொண்டிருப்பது
   .......... மேலே கொடுக்கப்பட்டவை எல்லாம்.